செ.வெ.எண்: 722

# செய்தி வெளியீடு – 3.9.2008

## தமிழகத்திற்கு கூடுதல் மின்சாரம் பெற தமிழக மின்துறை அமைச்சர் டெல்லி பயணம்

* * *

மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்களின் உத்தரவுப்படி, தமிழக மின்துறை அமைச்சர் ஆர்க்காடு திரு நா.வீராசாமி அவர்களும், தமிழ் நாடு மின் வாரியத்தின் தலைவர் திரு மச்சேந்திரநாதன் அவர்களும் மத்திய எரிசக்தித்துறை அமைச்சர் திரு சுசில் குமார் ஷிண்டே அவர்களையும், நிலக்கரித்துறை இணை அமைச்சர் திரு பகோடியா அவர்களையும் சந்தித்து, தமிழகத்தில் ஏற்பட்டுள்ள மின் தட்டுப்பாட்டைச் சமாளிக்கும் வகையில் தமிழகத்திற்கு மத்திய தொகுப்பிலிருந்து கூடுதல் மின்சாரம் ஒதுக்கீடு செய்திட வேண்டுமென்றும், நெய்வேலி நிலக்கரி நிறுவனம் அதிக மின் உற்பத்தி செய்து தமிழகத்துக்கு கூடுதலாக மின்சாரத்தை வழங்கிடவேண்டுமென்றும், தமிழக அரசின் சார்பில் நேரில் கேட்டுக் கொள்ள 4.9.2008 அன்று டெல்லி செல்கின்றனர்.

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
தலைமைச் செயலகம், சென்னை-9